# பாடம் 4 காயீனும் ஆபேலும் (ஆதியாகமம் 4)

நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவை விட, நாம் அவருக்கு எதைக் கொடுக்கிறோம், அவருக்காக என்ன செய்கிறோம் என்பதில் தேவன் ஆர்வமுடையவராய் இருக்கிறார் என்று நீங்கள் நினைத்திருக்கிறீர்களா?

இன்றைய பாடத்திலே தேவனுக்கு கொடுக்கப்பட்ட முதல் காணிக்கையை பற்றியும் உலகில் நடந்த முதல் கொலையை பற்றியும் கேட்க இருக்கிறோம். அவருக்காக, நாம் என்ன கொண்டு வருகிறோம் என்பதை விட அவருடைய பிள்ளைகளாக அவரோடு எவ்வளவு ஐக்கியமாய் இருக்கிறோம் என்பதில் தான் அவர் அதிக அக்கறை உள்ளவராக இருக்கிறார் என்பதையும் அறிவோம். ஆதாவையும் ஏவாளையும் உடுத்துவிப்பதற்காக தேவன் மிருகங்களை கொன்று, ரத்தம் சிந்தி அதன் தோல்களை பயன்படுத்தினார் என்று நாம் போன பாடத்தில் கற்றோம். நம்முடைய பாவங்களை மூடுவதற்காக இயேசு கிறிஸ்து மரித்து, ரத்தம் சிந்தினார் என்பது முதல் பாடமாக இருக்கிறது.

புதிய ஏற்பாட்டில் உள்ள எபிரெயருக்கு எழுதின நிருபம், பழைய ஏற்பாட்டிலிருந்து சில பாடங்களையும் எடுத்துக் கொள்கிறது. பழைய உடன்படிக்கையிலே தேவனுடைய எதிர்பார்ப்பையும், புதிய உடன்படிக்கையிலே தேவனுடைய எதிர்பார்ப்பையும் அது எதிர்மறையாக்குகிறது. முதல் குடும்பம் தேவனைப் பற்றி என்ன அறிந்திருந்தார்கள் என்பது நமக்கு விளங்குகிறது. ஏபிரெயர் 9:22 லே தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது ‘‘இரத்தஞ்சிந்துதலிராமல் பாவ மன்னிப்பில்லை’’. பழைய ஏற்பாட்டிலே இது மிருகங்களின் இரத்தத்தை குறிக்கிறது. புதிய ஏற்பாட்டிலே இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்மெல்லாருடைய பாவங்களுக்காகவும் ஒருமுறை சிந்தப்பட்டது. எனவே விலங்குகளை பலி செலுத்துவது பின்னர் அர்த்தமில்லாத ஒன்றாகி விட்டது.

ஆதியாகமத்திலே, ஆதாமும் ஏவாளும் ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று அவனுக்கு காயீன் என்று பெயரிட்டார்கள் என்று காண்கிறோம். இன்னும் சில காலம் சென்ற பின்பு மீண்டுமொரு ஆண்பிள்ளையைப் பெற்று அவனுக்கு ஆபேல் என்று பெயரிட்டார்கள். காயீன் நிலத்தைப் பயன்படுத்துகிற விவசாயி ஆனான். ஆபேல் ஆடு மாடுகளை மேய்க்கிற மேய்ப்பனான். ஆதியாகமத்தை எழுதின ஆசிரியர் இந்த குமாரர்கள் எப்படி வளர்ந்தார்கள் என்பதை எழுதவில்லை.

தேவனுக்கென்று அவர்கள் காணிக்கை கொடுக்க வேண்டிய நாளிலே,காயீன் விவசாயியாக இருந்ததினால் நிலத்தின் கனிகளிலே சிலவற்றை தேவனுக்குக் கொண்டு வந்தான். அவன் சகோதரனாகிய ஆபேலும் மந்தையின் தலையீற்றுகளில் சிலவற்றை தேவனுக்கு காணிக்கையாக கொண்டு வந்தான். தேவன் ஆபேலுடைய காணிக்கையை ஏற்றுக் கொண்டார். காயீனுடைய காணிக்கையை விரும்பவில்லை. இந்த காணிக்கையிலே நிலத்தின் கனிகள், மந்தையின் தலையீற்று என்ற வித்தியாசம் இல்லை. விசுவாசத்தோடு ஆபேல் தன் காணிக்கையை செலுத்தியதால்தான் அவனுடைய காணிக்கையை தேவன் ஏற்றுக்கொண்டார். எபிரெய நிருபத்தை எழுதியவர்,இவ்வாறு சொல்கிறார், “விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான். அதினாலே அவன் நீதிமான் என்று சாட்சி பெற்றான்” என்கிறார். அவனுடைய காணிக்கைகளை குறித்து தேவனே சாட்சி கொடுத்ததாக இயேசுவின் சீசனாகிய மத்தேயு தன்னுடைய சுவிசேஷத்திலே, “இயேசுவும் ஆபேலை நீதிமான் என்று குறிப்பிட்டுள்ளார்’’ என்று எழுதியுள்ளார். (மத் 23:35)

இதை பார்க்கும் பொழுது இரத்தம் சிந்தாமல், சடங்காச்சாரமாக, விசுவாசமில்லாமல் காயீன் காணிக்கையை செலுத்தியதாக தெரிகிறது. நாம் தேவனுக்குக் காணிக்கைகளை கொடுக்கும் போது எந்த சிந்தனையோடு, நம் இருதயத்திலே எவ்வளவு உற்சாகத்தோடு கொடுக்கிறோம் என்பதே மிகவும் முக்கியமானது. காயீனுடைய பலியை தேவன் ஏற்றுக்

கொள்ளாததினால் அவனுக்குள் கோபம் மூண்டது. இங்கே பார்க்கும் போது எப்படி செய்தால் சரி என்று காயீனுக்குத் தெரிந்திருந்தும் அதை அவன் கைக்கொண்டு நடக்கவில்லை என தெரிகிறது. தேவன் அவனிடம், "காயீனே ஏன் கோபமாயிருக்கிறாய்? நீ நன்மை செய்தால் உனக்கு மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் உன் வாசற்படியில் படுத்திருக்கும். அது உன்னை எகிறி பிடித்து எஜமானாய் மாறிவிடும். அதற்கு பதிலாக நீ அதை ஆண்டு கொள்ள வேண்டும்" என்றார்.

சில நாட்கள் கழித்து, காயீன் தன் சகோதரனாகிய ஆபேலை அழைத்து உலாவச் சென்ற சமயத்தில் அவனை வேண்டுமென்றே வஞ்சித்தான். அவர்கள் தனிமையாய் இருக்கும் போது கொஞ்சமும் எதிர்பாராத சமயத்தில் காயீன், ஆபேலை அடித்து கொன்று போட்டான். பிறகு அந்த நாளிலே கர்த்தர் காயீனை நோக்கி, "உன் சகோதரன் எங்கே?" என்று கேட்டார் தேவனுக்கு என்ன நடந்தது என்று ஏற்கனவே தெரியும். ஆனாலும் காயீன் தான் செய்த பாவத்தை அறிக்கையிடும்படி அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கிறார்.

ஆனால் அதற்கு பதிலாக காயீனோ பொய் சொல்கிறான். "நான் அறியேன்,என் சகோதரனுக்கு நான் காவலாளியோ?" என்றான். தேவன் மிகவும் துக்கமாக "ஓ! காயீனே நீ என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கி கூப்பிடுகிறது. ஒரு விவசாயியாக இந்த பூமியை நீ மிகவும் நேசிக்கிறாய். இப்பொழுதிலிருந்து உன் சகோதரனுடைய இரத்தம் இந்த பூமியிலே சிந்தப்பட்டபடியினால் அது சபிக்கப்பட்டிருக்கும். நீ நிலத்திலே பயிரிடுவாய், அது தன் பலனை இனி உனக்குக் கொடாது. நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய்" என்றார்.

உடனே தன் சுய பரிதாபத்தினாலே காயீன் கீழே விழுந்து அழுதான். பின்னர் அவன் "தேவனே உம்முடைய தண்டனை மிகவும் கொடூரமானது என்னுடைய நிலத்தையும் உம்முடைய பிரசன்னத்தையும் என்னை விட்டு எடுத்துப் போடுகிறீர்! நான் நோக்கமற்றவனாய் தனித்து இருக்கிறவனானேன். என்னைக் கண்டுபிடிக்கிற எவனும் என்னைக் கொன்று போடுவானே" என்றான். தான் செய்த காரியத்தைக் குறித்து காயீன் மனஸ்தாபப்படவில்லை என்றாலும் தேவன் தன்னுடைய கருணையினாலே அவனுக்கு ஜீவனைக் கொடுத்தார். தேவன் காயீனின் மேல் ஒரு எச்சரிக்கையின் அடையாளத்தைப் போட்டு, "காயீனைக் கொல்லுகிற எவன் மேலும் ஏழு மடங்கு பழி சுமரும்" என்றார்.

இதை கேட்டவுடன் காயீன் தேவ சமூகத்தை விட்டு வெளியேறினான். அவனுக்குள்ளிருந்த விசுவாசக் குறைவினாலே, பொறாமை, ஏமாற்றுதல், கொலைசெய்தல், கோபம், பொய் பேசுதல், சுய நலத்தை நாடுதல் ஆகிய குணங்கள் அவனுக்குள் வந்தது. இப்படியாக தேவன்மேல் விசுவாசம் வைக்காமல் தன்னையே சார்ந்து கொள்ளுகிற மனிதன் தன்னுடைய விருப்பத்தையே நிறைவேற்றி, தன்னுடைய வழியிலே காரியத்தை நடப்பிக்கிறவன் முடிவிலே, தன்னையே அழித்துக் கொள்ளுகிற நிலைக்குத் தள்ளப்படுகிறான்.

மனிதன் கீழ்படியவும், கீழ்ப்படியாமல் இருக்கவும். தெரிந்தெடுக்க தேவன் அவனுக்கு வாய்ப்பு கொடுக்கிறார். அவன் கீழ்ப்படியாமல் போகும் போது அதன் விளைவை அவனே அனுபவிக்க செய்வார். தேவன் நாம் அவருக்கு எதை கொடுக்கிறோம் என்பதில் அக்கறை காட்டுபவர் அல்லர். மாறாக நாம் எப்படிப்பட்ட மனநிலையிலிருக்கிறோம். மற்றவர்களோடு நம்முடைய ஐக்கியம் எப்படியிருக்கிறது என்பதிலே கவனமாயிருக்கிறார் என்பதை கற்றுக் கொடுப்பதால் இந்தப்பாடம் மிக முக்கியமானது.

நாம் எப்பொழுதும் பாவத்தைக் குறித்த எச்சரிக்கை உள்ளவர்களாய் இருக்க வேண்டும், இல்லையானால் பாவம் நம்மை அழித்து விடும். ஆனாலும் கூட தேவன் பாவத்தின் விளைவுகளிலிருந்து நம்மைக் காப்பாற்ற விரும்புகிறார். இயேசுவே என்னை மன்னியும் என்று

யாரெல்லாம் தங்கள் பாவங்களை அறிக்கையிடுகிறார்களோ அவர்களுக்கு கிருபையும் கருணையையும் அவர் அளிக்கிறார்.

இந்தப்பாடம் நமக்கு போதிக்கிற சத்தியம் என்னவென்றால், நம்முடைய பாவங்களை தேவனுக்கு மறைக்க முடியாது, மற்றும் நம்முடைய பாவங்கள் நம்மை தேவனிடமிருந்து பிரித்து விடுகிறது. அவைகளை குறித்த கணக்கை தேவன் நம்மிடத்தில் கேட்பார்.

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிப்போம்

1. ஏன் தேவன் ஆபேலுடைய காணிக்கையிலே சந்தோஷப்பட்டார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? (6 வினாடிகள் தாமதிக்கவும்)
   அவன் சரியான காணிக்கையை விசுவாசத்தோடு தேவனுக்கு படைத்தான் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.
2. காயீனுக்கு உண்மையிலே தேவன் அல்லது ஆபேல் யார் மீது கோபம்? (6 வினாடிகள் தாமதிக்கவும்)
   தேவன் மீதே கோபம். ஏனென்றால் அவனிடத்தில் உண்மையான விசுவாசக் குறைவை தேவன் கண்டார் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.
3. 'உன் சகோதரன் எங்கே என்று, ஏன் காயீனை நோக்கி தேவன் கேட்டதாக நீங்கள் நினைக்கிறீர்கள்? (6 வினாடிகள் தாமதிக்கவும்)
   'காயீன் தன் பாவத்தை அறிக்கையிட அவனுக்கு தேவன் ஒரு வாய்ப்புக் கொடுத்தார். என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால்,குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள். கடைசியாக இதைப் பற்றி கேட்டிராத ஒரு நண்பருக்கு இந்த பாடத்தை சொல்லுங்கள். இதைச் சொன்ன பிறகு உங்கள் நண்பருக்கும், தேவனுக்கும் உள்ள உறவைப் பற்றி கேளுங்கள். அவர்களோடு சேர்ந்து ஜெபியுங்கள்.

காயீன், தேவனுக்கு ஒரு காரியத்திலே கீழ்ப்படியாததினால் அவருடைய சமூகத்தை விட்டு போகக் கூடிய அநேக தவறான காரியங்கள் அவனுடைய வாழ்க்கையிலே சேர்ந்து கொண்டதை கற்பனை செய்து பாருங்கள். உங்களிடத்திலிருந்து தேவன் எப்படிப்பட்ட காணிக்கையை எதிர்பார்க்கிறார் என்று உங்கள் குடும்பத்தாருடன் கலந்துரையாடுங்கள்.உங்கள் இருதயத்தின் நோக்கங்களை பரிசோதிக்கும்படி பரிசுத்த ஆவியானவருடைய துணையை வேண்டிக் கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் காணிக்கையை விசுவாசத்தோடு தேவனுக்குச் செலுத்துகிறீர்களா? அல்லது மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக காணிக்கை கொடுக்கிறீர்களா? எப்படிப்பட்ட மனநிலையோடு காணிக்கை கொடுப்பதை தேவன் ஆசிர்வதிக்கிறார்?

IIகொரிந்தியர் 9:7ல் அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறு சொல்லுகிறார், 'உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்'.

பாடம் முடிந்தது